**செய்தி வெளியீடு எண்: 200** **நாள்: 10.03.2020**

## தூய தமிழ்ப் பற்றாளர் பரிசு!
## மாநில அளவில் 3 பேர் தேர்வு!
## மார்ச் 11–இல் அமைச்சர்கள் பரிசு வழங்குகிறார்கள்!

நடைமுறையில் மக்களிடம் பொதுப் பயன்பாட்டில் அனைத்து இடத்திலும் பேச்சுவழக்கில் பிறமொழிக் கலப்பில்லாமல் எங்கும் எதிலும் தூய தமிழைப் பயன்படுத்துவோரை ஊக்கப்படுத்தும் வகையில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தமிழ்நாடு அரசின் இசைவோடு பரிசுத் திட்டம் ஒன்றை அறிவித்திருந்தது.

அதை முன்னிட்டுப் பரவலாகப் பலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவற்றைச் சீர் தூக்கி, தொலைபேசி வழியாகவே அவர்களிடம் தொடர்பு கொண்டு உரையாடல் நிகழ்த்தி அந்த உரையாடல் வழியாகவே அவர்களின் தூயதமிழ்ப் பாங்கினை ஆய்வு செய்யும் வகையில் ஒரு நேர்காணல் குழு அமைக்கப்பட்டது.

27/02/2020 வியாழனன்று அகரமுதலி இயக்கக அலுவலகத்தில் இயக்ககத்தின் இயக்குநர் திரு. தங்க. காமராசு, தூய தமிழ்ப் பற்றாளர் பரிசுத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. சு. வீரவேலு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற தொலைபேசிவழி நேர்காணலில் இயக்ககத்தின் மூத்த பதிப்பாசிரியர்கள் முனைவர் மா.பூங்குன்றன், முனைவர் மு.கண்ணன் ஆகியோர் தூயதமிழ்ப் பரிசுக்காக விண்ணப்பித்தவர்களிடம் உரையாடி அவர்களின் தூய தமிழ்ப் பங்கினை ஆய்வு செய்தனர்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர் திருமதி ச.மல்லிகா, தலைமைச் செயலகத் தமிழ் வளர்ச்சிப் பிரிவு அலுவலர் திருமதி க. பூங்கொடி, அகரமுதலித் தொகுப்பாளர் முனைவர் வே.கார்த்திக் ஆகியோர் உரையாடல்களை உற்றுநோக்கி மதிப்பெண்களை வழங்கி அதனடிப்படையில் மூவரைத் தேர்ந்தெடுத்தனர்.

அவர்கள் மூவரும் யாரிடமும் தயக்கமில்லாமல் தூய தமிழையே பயன்படுத்தும் ஆர்வத்தினராவர்.

அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பற்றிய குறிப்புகள் பின்வருமாறு:

**திரு.சி.மணிகண்டன்:**

இவர் கோவையில் பிறந்தவர். 27 அகவையினர். முதுகலையும் ஆசிரியர் பயிற்சியும் பெற்று, வேலை தேடும் கல்வியியல் பட்டதாரி ஆவார். இவரின் தூயதமிழ்ப் பற்றிற்கும் பயன்படுத்தத்திற்கும் கோவை பேரூர் ஆதீனத் தலைவர் முனைவர் சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களும் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க.முருகேசன் அவர்களும் இவரைச் சில ஆண்டுகள் உற்றுநோக்கிச் சான்று அளித்துள்ளார்கள்.

**திரு.இரா.அரிதாசு:**

இவர் புதுச்சேரியில் பிறந்து அரியலூர் மாவட்டம் உட்கோட்டை அரசு தொடக்கப்பள்ளியில் இரவுக் காவலராகப் பணியாற்றி ஒய்வுபெற்ற 71 அகவை நிரம்பியவர். இவர் யாரிடமும் கலப்பில்லாத தூய தமிழில் பேசுவதை வழக்கமாகக் கொண்டவர். புதுச்சேரியைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் மு.இளங்கோவன் அவர்களும் திருவாரூரைச் சேர்ந்த முதுகலைத் தமிழாசிரியர் புலவர் எண்கண் சா.மணி அவர்களும் இவரின் தூயதமிழ்ப் பற்றிற்கு நற்சான்று அளித்துள்ளனர்.

**திரு.த. ஆரோக்கிய ஆலிவர் இராசா:**

இவர் திருச்சி தூய வளனார் கல்லூரியில் இளம் அறிவியல் இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவர். இவர் எங்கும் யாரிடமும் தூய தமிழைப் பயன்படுத்தும் வழக்கத்துடன், தொலைபேசி எண்களைக் குறிப்பிடும் இடத்திலும் தமிழிலேயே சொல்லும் பாங்குடையவர். இவரின் தூயதமிழ்ப் பயன்படுத்தத்திற்கு அவரின் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சூசை அவர்களும் தமிழாய்வுத் துறை இணைப் பேராசிரியர் செல்வக்குமரன் அவர்களும் இவரைச் சில ஆண்டுகள் உடனிருந்து உற்று நோக்கிச் சான்று அளித்துள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**